www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

HSL

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

8 - ஆம் வகுப்பு

# சமூக அறிவியல்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?
அ) பிரான்ஸ் ஆ) துருக்கி இ) நெதர்லாந்து (டச்சு) ஈ) இங்கிலாந்து

2. மூன்றாம் ஆங்கிலேய – மைசூர் போரின் போது ஆங்கிலேய தலைமை ஆளுநர் ________
அ) இராபர் கிளைவ் ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ் இ) காரன்வாலிஸ் ஈ) வெல்லெஸ்லி

3. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி
அ) கட்டபொம்மன் ஆ) ஊமைத்துரை இ) செவத்தையா ஈ) திப்பு சுல்தான்

4. வங்காளத்தில் அரசர் தர்மபாலரால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எது? அ) தட்சசீல பல்கலைக்கழகம்
ஆ) விக்ரமசீலா பல்கலைக்கழகம் இ) பனாரஸ் பல்கலைக்கழகம் ஈ) நாளந்தா பல்கலைக்கழகம்

5. ________ தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.
அ) நெசவு ஆ) எஃகு இ) மின்சக்தி ஈ) உரங்கள்

6. ________ பாறை 'முதன்மைப் பாறை' என்று அழைக்கப்படுகிறது. அ) படிவுப் பாறைகள்
ஆ) தீப்பாறைகள் இ) உருமாறியப் பாறைகள் ஈ)அடியாழப் பாறைகள்

7. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு ________ என்று பெயர்.
அ) ஆற்றின் சுழற்சி ஆ) நீரின் சுழற்சி இ) பாறைச் சுழற்சி ஈ) வாழ்க்கைச் சுழற்சி

8. ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் ________ எனப்படுகிறது.
அ) குடிபுகுபவர் ஆ) அகதி இ) குடியேறுபவர் ஈ) புகலிடம் தேடுபவர்

9. இந்தியப் பெருங்கடலில் சுனாமி ________ ஆம் ஆண்டில் ஏற்பட்டது.
அ) 1990 ஆ) 2004 இ) 2005 ஈ) 2008

10. உடைமையாளர்கள் அடிப்படையிலான தொழிலகங்கள் ________ வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

11. கூற்று: ஆப்பிரிக்காவின் நிலவியல் தோற்றங்களில் ஒரு முக்கிய அம்சம் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு ஆகும்.
காரணம் : புவியின் உள்விசை காரணமாக புவியின் மேற்பரப்பில் உண்டான பிளவு.
அ) கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுகான காரணம் சரியான விளக்கம்.
ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் கூற்றுகான காரணம் சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு. ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.

12. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?
அ) பிறப்பின் மூலம் ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்
இ) வம்சாவளியின் மூலம் ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

13. பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக விவரிக்கிறது? அ) அடிப்படை உரிமைகள்
ஆ) அடிப்படை கடமைகள் இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் ஈ) அரசியலமைப்பின் முகவுரை

14. பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி (சாலை பாதுகாப்பு விதிகள்).
அ) வளைவுகளில் மெதுவாக செல் ஆ) வேக கட்டுப்பாட்டு அளவினைக் கடைபிடி
இ) வாகனம் ஓட்டும்போது செல்லிடபேசியைப் பயன்படுத்து ஈ) சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்

II. பொருத்துக 6 x 1 = 6

15.

| | | |
|---|---|---|
| i) மதுரை | – | வாக்களிக்கும் உரிமை |
| ii) நிரந்தர நிலவரி திட்டம் | – | கீழவை |
| iii) அரசியல் உரிமை | – | பண்டைய நகரம் |
| iv) இந்திய ரிசர்வ் வங்கி | – | அனிமா மீட்டர் |
| v) காற்றின் வேகம் | – | வங்காளம் |
| vi) சட்டமன்ற பேரவை | – | 1935 |

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DISTRICT
PH:9003373506



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

16. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் ________ இல் அமைந்துள்ளது.
17. ________ 'சிவகங்கையின் சிங்கம்' என அழைக்கப்படுகிறார்.
18. சம அளவுள்ள வெப்பநிலையை இணைக்கும் கற்பனைக் கோடு ________
19. இந்திய அரசியலமைப்பின் 24 வது சட்டப்பிரிவு ________ யை தடை செய்கிறது.
20. மின்னணு வங்கியை ________ என்றும் அழைக்கலாம்.

**IV சரியா / தவறா எனக் குறிப்பிடுக.** 5 x 1 = 5

21. வங்காளத்தின் வில்லியம் கோட்டையில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.
22. 1948 ஆம் ஆண்டு தொழிலக கொள்கையானது கலப்பு பொருளாதாரத்தை கொண்டு வந்தது.
23. அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் பொதுவாக இடைநீர் ஓட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது.
24. குடிசைப் பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது.
25. நாட்டுரிமையை மாற்ற இயலும் ஆனால் குடியுரிமையை மாற்ற இயலாது.

**V. வேறுபடுத்துக.** 5 x 2 = 10

26. மண்வள பாதுகாப்பு – மண்ணரிப்பு
27. கோள் காற்றுகள் – பருவகாலக் காற்றுகள்
28. வெள்ளப்பெருக்கு – வறட்சி
29. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் – கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள்
30. மேற்கு அண்டார்டிகா – கிழக்கு அண்டார்டிகா

**VI காரணம் கூறுக.** 5 x 1 = 5

31. நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவுப் பாறைகள் காணப்படுகின்றன.
32. காலநிலையும் வானிலையும் வெவ்வேறு இடங்களில் மாறுபடுகின்றன.
33. நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.
34. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.
35. எகிப்து 'நைல் நதி நன்கொடை' என அழைக்கப்படுகிறது ஏன்?

**VII. சுருக்கமாக விடையளி (எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி).** 10 X 2 = 20

36. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.
37. இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?
38. பாளையக்கார புரட்சியில் வேலு நாச்சியாரின் பங்கு என்ன?
39. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக?
40. தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?
41. காலநிலை – வரையறு
42. நீர் கொள் பரப்பு பற்றிக் குறிப்பு வரைக.
43. நகரமயமாக்கல் என்றால் என்ன?
44. மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதிகள் யாவை?
45. 1955 ஆம் ஆண்டு இந்திய குடியுரிமைச் சட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?
46. மனித உரிமைகள் என்றால் என்ன?
47. கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?

SIVANANDHA K M.A.,B.ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DISTRICT
PH:9003373506

**VIII விரிவான விடையளி.** 4 x 5 = 20

48. இரண்டாம் கர்நாடக போர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. (அல்லது)
சமண, பௌத்த மடாலயங்களில் கல்வியின் முக்கியக் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்.
49. நிலச்சரிவிற்கான காரணங்கள் குறித்து விரிவான விளக்கம் தருக. (அல்லது)
தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளை விளக்குக.
50. சமயச்சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை? (அல்லது) சாலை விபத்துக்களுக்கான காரணங்களை விவரி.
51. பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக. (அல்லது)
சேமிப்பு மற்றும் முதலீடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**IX. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் (India out line map) குறிக்கவும்.** 10 x 1 = 10

i) அஸ்ஸாம் ii) நாளந்தா iii) ரிஷ்ரா iv) மீரட் v) கேடா vi) தக்காணம்
vii) அடையாறு viii) ஆற்காடு ix) தஞ்சாவூர் x) இந்தியப் பெருங்கடல்

**X கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.** 5 x 1 = 5

i) ஆர்டிக் வட்டம் ii) மித வெப்ப மண்டலம் iii) ஐரோப்பா iv) ஆப்பிரிக்கா v) ஆஸ்திரேலியா



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com